தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-6-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் உலகச் சுற்றுச்சூழல் தினம்

தமிழ்நாடு வேளாண்மைப் பலக்கலைக்கழகத்தில் ஜுன் 5ம் நாள் உலக சுற்றுச்சூழல் தினம் அனுசரிக்கப்பபட்டது. இந்த வருடத்தின் கொள்கை ஏழு பில்லியன் கனவு - ஒரு கோள் - பொறுப்புடன் அனுபவிப்போம்.

வேளாண் பல்கலை இயற்கை வள மேலாண்மை இயக்ககம், சுற்றுச்சூழல் அறிவியல் துறை மற்றும் நாட்டு நலப் பணித்திட்டம் ஒருங்கிணைந்து மருதமலை சாலை பகுதியில் ஒரு கிலோமீட்டர் தூரம் தூய்மை பணி திட்டம் மேற்கொண்டது. இதில் 200 நாட்டு நலப் பணித் திட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டு தூய்மைப் பணியில் ஈடுபட்டனர்.

முனைவர். வ.பெ. துரைசாமி, சிறப்பு அலுவலர், இயற்கை வள மேலாண்மை இயக்ககம் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். அவர் தூய்மையான சுற்றுச்சூழலே வளமான நாட்டுக்கு அடித்தளம் என்று கூறினார். ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு சார்பாக சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டால் தான் நிலையான வேளாண்மைக்கு வழிகோல இயலும் என்றுரைத்தார். மண், நீர், காற்று மற்றும் அனைத்து இயற்கை வளங்களும் காக்கப்பட வேண்டும் என்றும் அப்போது தான் தொடர்ந்து வேளாண்மையில் முன்னேற்றம் காண முடியும் என்று கூறினார்.

முனைவர். ச. மகிமைராஜா, முதன்மையர் (வேளாண்மை) அவர்கள் தூய்மைத் திட்டத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். அப்போது அவர் நாட்டு நலப் பணித் திட்டத்தில் தூய்மையான வளாகம் பசுமையான வளாகம் என்னும் கொள்கை

வலியுறுத்தப்படுகிறது. ஐக்கிய நாடுகள் ஆய்வு தகவல் படி நாம் இப்போது உபயோகப்படுத்தும் அளவில் இயற்கை வளங்களைப் பயன்படுத்தினால் இன்னும் 20 ஆண்டுகளில் மூன்று கோள்களில் உள்ள இயற்கை வளங்கள் பூமிக்கு தேவைப்படும் என்னும் சிந்திக்கத்தக்க உண்மையை நினைவு கூர்ந்தார். நீராதாரங்களும் அதன் தரமும் குறைந்து வருகிறது. உலகின் 17.6 சதவிகிதம் மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் 4.6 சதவிகிதம் நீராதாரம் மட்டுமே உள்ளது. தொடர்ந்து பெருகிவரும் மக்கள் தொகையால் நீராதாரங்களின் தரத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டு வருகிறது.

இதே போல் மண் வளம் குறைபாடு, காற்று மாசடைதல், உலக வெப்பமயமாதல் போன்ற காரணங்களால் பூமி உயிர் வாழ தகுதியான சூழ்நிலையில் தொடர்ந்து நிலைக்க வேண்டுமானால் சுற்றுச்சூழல் மேம்பாட்டில் இளைஞர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறி இன்றைய இளைஞர்கள் கையில் தான் நாளைய இந்தியாவின் முன்னேற்றம் உள்ளது. குறிப்பாக நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் அக்கறையோடு செயல்பட்டு சுற்றுச்சூழலைக் காத்து வளமான இந்தியாவை உருவாக்க வேண்டும் என்றார். இன்னும் பத்து ஆண்டுகளில் 450 மில்லியன் டன் உணவு தானிய உற்பத்தி செய்தால் தான் அனைத்து மக்களுக்கும் உணவளிக்க முடியும். அதற்கு இயற்கை வளங்களையும் பாதுகாக்க இளைஞர்கள் முன் வர வேண்டும் என்று எழுச்சியூட்டினார்.

முனைவர். ந. ரகுபதி, இயக்குநர் மாணவர் நலன், முனைவர். பி, சுப்ரமணியம், பேராசிரியர் மற்றும் தலைவர், சுற்றுச்சூழல் அறிவியல் துறை முனைவர். க. குமுதா, நாட்டு நலப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர், சுற்றுச்சூழல் அறிவியல் துறை பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர்கள், சுகாதார அலுவலர் ஆகியோர் பங்கு பெற்றனர்.

இளம் மாணவ, மாணவியர் தூய்மைப்படுத்தலில் ஈடுபட்டது பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதாய் அமைந்தது. சுற்றுச்சூழலை சுத்தமாக வைக்க இளைஞர்கள் முற்படுவதைப் பாராட்டினர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்